## தெஹிஅத்தகண்டி பிரதேச சபை
## அம்பாறை மாவட்டம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 21 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 யூலை 15 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூலை 30 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

நிதிக் கூற்றுக்களானவை தெஹிஅத்தகண்டி பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கு உரித்தற்ற ரூபா 144,288 தொகையான வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக ஆண்டின் வருமானம் அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டிற்குரிய, மீளாய்வாண்டின்போது செலுத்தப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களின் நிலுவைச் சம்பளம் ரூபா 55.680 தொகை மீளாய்வாண்டின் செலவினமொன்றாகப் பதியப்பட்டமையின் காரணமாக ஆண்டின் செலவினம் அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணங்காமைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132 ஆம் பிரிவு | உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரமின்றி தனியார் வாகனங்களுக்காக 02 சந்தர்ப்பங்களின் போது ரூபா 32,450 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

(ஆ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிக் கோப்பு

| | | |
|---|---|---|
| (i) | விதி 59 | மீளாய்வாண்டில் வியாபார தொழில் முயற்சிகள் மற்றும் கைத்தொழில்கள் தொடர்பான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | விதி 180 | பிரதேச சபையில் காசு மற்றும் களஞ்சியத்திற்கு பொறுப்பாக செயற்படுகின்ற உத்தியோகத்தரினால் பிணை வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,990,688 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,677,272 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 1,135 | 1,135 | 2,162 |
| (ii) | வாடகை | 3,087 | 3,087 | 26 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,128 | 1,128 | 44 |
| (iv) | ஏனைய வருமானம் | 2,110 | 3,667 | 1,470 |

#### 2.2.2 நீதிமன்றத் தண்டப்பணம்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதவான் நீதிமன்றத்திலிருந்து ரூபா 80,583 தொகையான நீதிமன்றத் தண்டப்பணமொன்று கிடைக்க வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------------

3.1 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

----------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றும் போது அதற்காக தங்குமிட வசதிகள் மற்றும் உணவு பானங்கள் வழங்கப்பட்டிருந்தும் இணைந்த படிகள் மற்றும் அமையப்படிகளாக ரூபா 13,562 தொகை மீளாய்வாண்டின் முதல் 03 மாதங்களில் உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2010 செப்தெம்பர் 01 ஆந் திகதிய 446 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணானதாக தலைவருக்கும் உபதலைவருக்கும் மாதாந்தம் முறையே ரூபா 5,000 மற்றும் ரூபா 3,500 வீதம் மீளாய்வாண்டின் போது கூட்டுமொத்தமாக ரூபா 102,000 தொகை கையடக்கத் தொலைபேசிகளுக்கான முற்கொடுப்பனவு அட்டைகளுக்காகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மாகாண திறைசேரி பிரதான செயலாளரின் 2014 சனவரி 22 ஆந்த திகதிய EP/09/BD/2014 /TELE 56 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் பிரதேச சபை செயலாளரின் கையடக்கத் தொலைபேசிக் கட்டணம் ஆகக்கூடிய மாதாந்த எல்லை ரூபா 4,000 இனை விஞ்ச முடியாது எனக் காண்பிக்கப்பட்டிருந்தும் செயலாளருக்கு மீளாய்வாண்டில் முதல் 03 மாத காலத்தில் அந்த எல்லையை விஞ்சி ரூபா 5,077 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

3.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

------------------------------------------------------------------------------------------------------------

(அ) உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சிலிருந்து 2008 ஆம் ஆண்டின் போது பெறப்பட்ட மஹேந்திரா கெப் வண்டி பழுதுபார்க்கப்பட்டு பயன்படுத்த முடியுமாக இருந்த போதிலும், பழுதுபார்க்கப்படாமல் 4 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்படுகின்றது.

(ஆ) 2003 ஆம் ஆண்டின் போது பெறப்பட்ட கெப் வண்டியொன்று பழுதுபார்க்கப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலையில் காணப்படுவதுடன் 4 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்படுகின்றது.

(இ) 2004 ஆகஸ்ட் 12 ஆந் திகதி ரூபா 216,550 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த முச்சக்கர வண்டி பழுதுபார்க்கப்பட்டு ஓட்டத்தில் ஈடுபடுத்தக்கூடிய நிலையில் காணப்படுகின்ற போதும், 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது.

(ஈ) முறையாக மஹாவலி அதிகாரசபையிலிருந்து உரிமைத்துவத்தை கையேற்காதிருந்த நான்கு சக்கர உழவு இயந்திரமொன்று தொடர்ந்தும் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டதுடன் அது பிரதேச சபையின் வளவில் தரித்து வைக்கப்பட்டிருந்தது.

(உ) பழுதுபார்க்கப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய 02 ரேலர்கள் வருடமொன்றிற்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்படுகின்றது.

3.3 உள்ளகக் கணக்காய்வு

----------------------------------------------

மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் சபையில் உள்ளகக் கணக்காய்வு இடம்பெறாதிருந்ததுடன் உள்ளூராட்சித் திணைக்களத்தினாலும் போதியளவான கணக்காய்வொன்று நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) வாகனக் கட்டுப்பாடு
(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு